# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024

Prosecution Witness -P.W. 13

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மதியழகன் |
| Father's Name | : | S. இளைய பெருமாள் |
| Village | : | ஈத்தன்காடு |
| Taluk | : | கல்குளம் |
| Caste | : | கேரள முதலியார் |
| Calling | : | SSI 1033 வடசேரி P.S. |
| Religion | : | இந்து |
| Age | : | 56 |
| Date | : | 13.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

13.06.2024

முதல் விசாரணை :-

நான் தற்போது வடசேரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். வழக்கு சம்பவ சமயத்திலும் அங்கே தான் பணி புரிந்தேன். நிலைய குற்ற எண். 120/2023 ல் சட்ட பிரிவு 294(b), 324, 302 வழக்கில் இறந்து போன மனோஜ் என்பவரின் பிரேத பரிசோதனை அலுவலில் என்னை ஆய்வாளர் நியமித்தார்கள். 29.08.2023 அன்று வெட்டூர்ணிமடத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்து

கொண்டிருந்தார். பிரேத விசாரணை முடிந்த பிறகு 3.30 மணியளவில் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் பிரேதத்தை ஒப்படைப்பதற்காக கொடுத்த விண்ணப்பத்துடன் 4.00 மணியளவில் கொண்டு போய் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை செய்வதற்காக ஆய்வாளர் கொடுத்த விண்ணப்பத்தை மருத்துவமனை பேராசிரியரிடம் மறுநாள் காலை ஒப்படைத்தேன். 29.08.2023 அன்று பகல் 12.40 மணிக்கு பிரேதத்தை பேராசிரியருக்கு அடையாளம் காட்டினேன். அப்போது காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வீடியோ கிராபர் வந்திருந்தார். வீடியோ எடுத்தார். 13.00 மணியிலிருந்து 14.00 மணி வரை பிரேத பரிசோதனை நடந்தது. சீல் வைக்கப்பட்ட காகித உறை ஒன்று, சீல் வைக்கப்பட்ட அட்டை பெட்டி ஒன்று, சீல் வைக்கப்பட்ட கண்ணாடி பாட்டில்கள் ஐந்து ஆகியவற்றை பேராசிரியர் என்னிடம் ஒப்படைத்தார். அவற்றை என் பாதுகாப்பில் கொண்டு வந்து நிலையத்தில் பாதுகாப்பாக வைத்தேன். மேலும் வீடியோ எடுக்கப்பட்ட Memory Card என்னிடம் ஒரு கவரில் போட்டு சீல் வைத்து குற்றவியல் நடுவர் எண் 2 நீதிமன்றம் ஒப்படைக்க சொன்னார். பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். Memory Card ஐ நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். 29.08.2023 அன்று நீதிமன்றத்திலிருந்து சீல் வைக்கப்பட்ட கவர் என்னிடம் கொடுத்து திருநெல்வேலி வட்டார ஆய்வகத்திற்கு ஒப்படைக்க சொன்னார்கள். ஏற்கனவே நான் பாதுகாப்பில் வைத்திருந்த பேராசிரியர் என்னிடம் ஒப்படைத்த பொருட்களையும் திருநெல்வேலி வட்டார ஆய்வகத்திற்கு மேற்சொன்ன சீல் வைத்த கவருடன் 03.10.2023 அன்று ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன பொருட்கள் எதுவுமே நான் சொல்லும் நேரத்தில் சொல்லும் இடத்தில் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அவை என்னிடம்

கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னவாறு எந்த பணியும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.